புதுக்கோட்டை பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும், மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிக்கு பணிநியமன ஆணைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 26.10.2024 அன்று வழங்கினார்கள். உடன் மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (மதுரை) திருமதி.ஆ.ஜோதிமணி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.கே.ஸ்ருதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மோ.மணிகண்டன், பெ.வேல்முருகன் (தொ.வ), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்ட தீர்மானம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! எம்.பன்னீர்செல்வம் – என்.இளையராஜா– மன்னை த.சோழராஜன், எம்.தினேஷ்குமார் பங்கேற்பு!

மயிலாடுதுறை, அக்.28- மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக சிர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்களை அறிமுகப்படுத்தியும், கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும், மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், மயிலாடுதுறை சட்ட மன்ற தொகுதி பார்வையாளருமான என்.இளையராஜா, மாநில மாணவரணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞரும், சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எம்.தினேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினாhகள். கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, செல்ல.சேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஞான.இமையநாதன், மலர்விழிதிருமாவளவன், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், கு.வைத்திய நாதன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், பி.கென்னடி, அ.காந்தி, எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், சுபாநெடுஞ்செழியன், பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, எம்.அன்புசெழியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, சௌமியன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், சாந்தி, வி.எஸ்.பிரபாகர், ஆர்.மனோகரன், வி.என்.சென்.செந்தில், இரா.செல்வராஜ், மா.வைத்திய நாதன், எம்.எஸ்.முத்து குபேரன், காளி.தேசப்பன், வெடி எஸ்.பாலமுருகன், திபா.சத்தியேந்திரன், குத்தாலம் க.அறிச்செல்வன், இரா.தன்ராஜ், இரா.முருகன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோசி.ம.திருமாவளவன், எம்.சக்திவிஜய், சௌ.சர்வோதயன், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் கே.மகேந்திரன், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதாமாரியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

2026 சட்ட மன்ற தேர்தலில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி ஆகிய மூன்று சட்ட மன்ற தொகுதிகளிலும், கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான ஆட்சி மீண்டும் ஆட்சி அமைத்திட, தளபதி அவர்களின் கரத்தை வலுப்படுத்திடும் வகையில் தேர்தல் பணியினை கழக நிர்வாகிகள், கழகத்தினர் உடன் தொடங்கிட வேண்டும் என்றும், தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் சரிபார்க்க சிறப்பு முகாம் குறித்து அறிவிப்பு வெளியிடப்படும் நாற்களில் கழக வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கழகத்தினர் மற்றம் கழக ஆதரவாளர்கள் பெயர்களை புதிய வாக்காளர்களாக சேர்த்திட வேண்டும் என்றும், ஒன்றிய, நகர, பேரூர் செயலளார்கள் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 வினர் அனைவருக்கும் தகவல் தெரிவித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

ஒற்றை செங்கல்லால் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் அவலங்களை தோலுற்றித்து காட்டிய, தமிழ்நாடு முழுவதும் சுற்று பயணம் செய்து கழக நிகழ்ச்சிகள், கழகத்தினர் இல்ல நிகழ்ச்சி, தேர்தல் நேரத்தில் தமிழகம் முழுவதும் கழக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு, மக்கள் நலனுக்கான போராட்டங்கள் என கழகத்திற்காக உழைத்து, உழைப்பால் உயர்ந்த கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான வரும் நவம்பர் 27ம் தேதி அன்று அனைத்து கிளை, வார்டுகளில் உள்ள கழக கொடி கம்பங்களை சீரமைத்தும், புதிய கொடி கம்பங்களை அமைத்தும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கிட வேண்டும் என்றும், மேலும் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொடர் நிகழ்ச்சிகளாக மருத்துவ முகாம், இரத்தான முகாம், மரக்கன்றுகள் வழங்குதல், நடுதல், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம் உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும், எழை, எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக எழுத்தியுடன் கொண்டாடடுவது என்றும், அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் சுவர் விளம்பரம் செய்திட வேண்டும் என்றும், மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வரும் நவம்பர் 24ம் தேதி மயிலாடுதுறை மாவட்டடத்திற்கு வருகை தரும் கழக இளைஞர்ப அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுங்கிலும் சிறப்பான வரவேற்பு வழங்கிடுவது என்றும், அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தொகுதி பார்வையாளர்கள் மயிலாடுதுறை என்.இளையராஜா, பூம்புகார் மன்னை த.சோழராஜன், சீர்காழி தினேஷ்குமார், மாநில சார்பு அணி நிர்வாகிகள் ஆர்.அருள்செல்வம், ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மற்றும் பலர் உள்ளனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், சின்னப்புத்தூர் ஊராட்சி, சத்திரத்தில் சின்னப்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு மருத்தகத்தினை தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெளிக்ஸ்ராஜா உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும்

பருவமழை குறித்து எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.28- தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.10.2024) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையை யொட்டி தற்போது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வரும் மழைக்காலங்களை யொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 14-ஆம் தேதி, 15-ஆம் தேதி, 16-ஆம் தேதி ஆகிய நாட்களில் பெய்த மழையின் போது மழை நீரை அகற்றும் பணியில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் பணியாற்றிட 15 மண்டலங்களுக்கும் ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, இரவு, பகலாக சிறப்பாக பணிகளை மேற்கொண்டீர்கள். அவ்வளவு மழை நீரும் சில மணி நேரங்களிலேயே வடிந்து சென்றது. சில பகுதிகளில் மோட்டார் வைத்து நீர் அகற்றப்பட்டது. சில மணிநேரங்களிலேயே பொதுமக்கள் தங்களுடைய இயல்பு நிலைக்கு திரும்பினார்கள். அடுத்த நாட்களில் மழை பெய்த சுவடு கூட தெரியாத அளவுக்கு மிகச் சிறப்பாக பணியாற்றிய உங்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது பெய்துள்ள மழை வெறும் ஆரம்பம்தான். நவம்பர் மாதத்தில்தான் தீவிர மழைக்காலம் ஆரம்பமாகும் என்று நம்முடைய வானிலை ஆய்வு மையத்தினர் கணித்து உள்ளார்கள். கடந்த 19.10.2024 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் நீங்கள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் குறித்து இங்கே தெரிவிக்கலாம்.

நீங்கள் நியமிக்கப்பட்டுள்ள பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மழை, வெள்ள முன்னேற்பாட்டு பணிகள் குறித்து தெரிவிக்கவும். நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடை ஆகிய நீர்நிலைகளை சென்னை பெருநகர மாநகராட்சி பராமரிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் பிறகு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். 14.10.2024 அன்று இரவு, பருவமழையினால் நாராயணபுரம் ஏரிக்கரையில் சேதமடைந்த பகுதிகள், அந்த ஏரியின் shutter பகுதி மற்றும் கீழ்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாயின் உடைப்பு பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டோம். அப்போது நீர்வளத்துறை அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொண்டோம். அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் இங்கே தெரிவிக்க வேண்டும்.

ஒக்கியம் மடுவு பகுதியில் பார்வையிட்டோம். அங்கு தெரிவித்த ஆலோசனைகளுக்கு முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா, என்பது குறித்தும் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

அதேபோல் எண்ணூர் முகத்துவாரத்தில் படிந்துள்ள (FLY ASH) சாம்பல் கழிவுகளை அகற்றுவதற்கு நிதி ஒதுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். உடனே முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வடசென்னை அனல் மின் நிலையத்தின் நிதி உதவியாக ரூ. 28.00 கோடி வழங்க ஒப்புதல் அளித்தார்கள். தற்பொழுது நடவடிக்கைகள் எந்த நிலையில் உள்ளன என்பதையும் இங்கே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்த 15 நாட்களில் கண்காணிப்பு அலுவலர்கள் கட்டுப்பாட்டில் உள்ள மண்டலங்களில் மேற்கொள்ளப்பட உள்ள சீரமைப்பு நடவடிக்கைகள் எவை, எவை என்றும், அவை தற்போது எந்த நிலையில் உள்ளன என்பது குறித்தும் தெரிவிக்கவும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் மழை நீர் தேங்கிய இடங்களின் விவரங்கள், அந்த இடங்களில் மழைநீர் வடிய எடுத்துக் கொண்ட நேரம், மழைநீர் கால்வாய்கள் மூலம் நீர் வடிந்து சென்ற இடங்களின் விவரங்கள், மோட்டார் பம்ப் வைத்து நீர் அகற்றப்பட்ட இடங்களின் விவரங்கள் என்று விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் மழையின்போது மின்தடை செய்யப்பட்ட பகுதிகள், எவ்வளவு மணி நேரத்தில் மின் இணைப்பு அந்த இடங்களுக்கு வழங்கப்பட்டன. மின் இணைப்பு துண்டிக்காமல் இருக்க மேற்கொள்ளப்பட்ட, பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார். பத்திரிக்கைகளில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள் குறித்தும், சமூக வலைதளங்களில் வெளிவந்த தகவல்கள் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை பெருநகர மாநகராட்சி, நீர்வளத்துறை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள் குறித்தும், பிற பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற அக்டோபர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாட்டு பணிகளையும் கூடுதல் கவனத்துடன் அனைத்து துறை அலுவலர்களும், கண்காணிப்பு அலுவலர்களும் மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். சென்ற மழையின்போது மிகச் சிறப்பாக பணியாற்றி மக்களுடைய நன்மதிப்பை நாம் பெற்றோம். எதிர்காலத்திலும் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி மழை வெள்ளத்தில் இருந்து மக்களை காத்து இந்த அரசிற்கு நற்பெயரை பெற்றுத் தர நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கின்றேன் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டையில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு!

பணிநியமன ஆணைகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை அக் 28- புதுக்கோட்டை பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும், மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் (26.10.2024) அன்று வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதல், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், தனியார் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல், உதவித்தொகைகள் வழங்குதல், திறன் பயிற்சிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு, தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை உள்ளிட்ட பல்வேறு பிரிவு களின்கீழ் உள்ள 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று தங்களுக்கான பணியாளர்களை தேர்ந்தெடுத்து வருகின்றனர். மேலும் இம்முகாமில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 1,736 வேலை நாடுனர்கள் கலந்துகொண்டு அவர்களின் தகுதிக்கேற்ப 414 (9 மாற்றுத்திறனாளிகள்) நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகிறது.

எனவே, இம்முகாமில் பணிநியமன ஆணைகளை பெற்றுக்கொண்டவர்கள் அனைவரும், தங்களது வேலையினை சிறப்பாக மேற்கொண்டு, வாழ்க்கையில் சிறந்த நிலையினை அடைய எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது; நலத்துறை அமைச்சர் முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு

பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில், இலவச திறன் மேம்பாடு பயிற்சிகளுக்கான பதிவு மற்றும் ஆள்சேர்ப்பு நடைபெறுதல், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு அரங்குகள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை விண்ணப்பம் வழங்குதல், தமிழ்நாடு அரசு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளுக்கான பதிவு நடைபெறுதல் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற முகாம்களை மாணாக்கர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் ஆகியோர் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது வாழ்வினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (மதுரை) ஆ.ஜோதிமணி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கே.ஸ்ருதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மோ.மணிகண்டன், பெ.வேல்முருகன் (தொ.வ), முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், உதவித் திட்ட அலுவலர் கே.தில்லைமணி, தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ. தெய்வானை, எம்.எம்.பாலு, எம்.பி.சரவணன், வட்டாட்சியர் பரணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்

துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக பொறுப்பேற்றதை சிறப்பிக்கும் வகையில் கோவை பேரூர் போஸ்டல் காலனியில் உள்ள அன்பு இல்லத்தில் உள்ள ஆதரவற்ற முதியவர்கள் மற்றும் மாற்று திரனாளிகளுக்கு திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் இரவு உணவு வழங்கினார் உடன் பிரசன்னா ராஜேந்தர் அருண் , ஜகன் , செந்தில் ,மற்றும் கல்லூரி மாணவர்கள் இளைஞர்கள் உடனிருந்தனர்.